





# 4 மோனோ ரயில் நிலையங்கள் மூடப்பட்டன

## பழுது பார்ப்புப் பணிகள் தீவிரம்

கோலாலம்பூர், மே 9-
தண்டவாள பாதையில் துப்புரவு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் நான்கு மோனோ ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன.

ஜாலான் சுல்தான் இஸ்மாயில் அருகே புக்கிட் நானாஸ், ராஜா சூலன், புக்கிட் பிந்தாங் மற்றும் இம்பி ஆகிய இடங்களில் உள்ள அந்த நிலையங்கள் மூடப்பட்டிருப்பதாக ரேப்பிட் ரயில் செண்டிரியான் பெர்ஹாட் (ரேப்பிட் ரயில்) வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் பலத்த பழை பெய்ததன் காரணமாக ஜாலான் சுல்தான் இஸ்மாயில் அருகே ஏராளமான மரங்கள் பெயர்ந்து விழுந்தன.

அங்குள்ள மோனோரயில் தண்டவாளத்திலும் மரங்கள் விழுந்தன. இதனால் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.

அங்கு துப்புரவு மற்றும் பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது பல நாட்களுக்கு நீடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயணிகளின் பாதுகாப்பு காரணமாக அந்த நான்கு ரயில் நிலையங்களும் மூடப்படுகின்றன.



அங்கு வருகின்ற பயணிகளுக்கு உதவிகள் வழங்கப்படுகிறது. அங்கிருந்து இலவச பஸ்கள் மூலமாக மற்ற நிலையங்களுக்கு கொண்டு செல்லும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனிடையே கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் போக்குவரத்து பிரிவு உட்பட நான்கு இலாகாக்களை சேர்ந்த நூற்றுக்கணக்கான பணியாளர்கள் அங்கு துப்புரவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதே வேளையில் பலத்த மழை மற்றும் புயல் காற்று காரணமாக மரங்கள் பெயர்ந்து விழுந்ததால் குறைந்தது 17 வாகனங்கள் முற்றாக சேதம் அடைந்தன.

ஒருவர் உயிர் இழந்த வேளையில் குறைந்தது மூன்று பேர் எலும்பு முறிவு காயங்களுக்குள்ளானார்கள் என்று டாங் வாங்கி மாவட்ட காவல்துறை தலைவர் நஸ்ரோன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நண்பகல் தொடங்கி மாலை வரையில் மாநகர் முழுவதும் பலத்த மழை பெய்தது. புயல் காற்றும் வீசியது.

பிற்பகல் 2.20 மணியளவில் ஜாலான் சுல்தான் இஸ்மாயில் அருகே ஏராளமான மரங்கள் பெயர்ந்து விழுந்தன. குறைந்தது 17 வாகனங்கள் சேதம் அடைந்தன.

ஒரு வாகனத்தின் மீது பெரிய மரம் விழுந்தது. அதனால் அந்த வாகனம் முற்றாக நொறுங்கியது.

வாகனமோட்டி அதில் சிக்கிக் கொண்டார். தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் அவர் உயிரிழந்து விட்டார். அந்த காரில் இருந்த இன்னொருவர் காயம் அடைந்தார். அதே சமயத்தில் வாடகைக்காரும் சேதமடைந்தது. அதன் டிரைவரும் பயணம் செய்து கொண்டிருந்த 72 வயது வெளிநாட்டு பெண் பயணியும் காயம் அடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக கோலாலம்பூர் பெரிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதனிடையே துப்புரவு பணிகள் காரணமாக புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் பல சாலைகள் மூடப்பட்டிருப்பதாக நஸ்ரோன் தெரிவித்தார்.